அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 10 இதழ் : 08 ஆகஸ்ட் 2024 தனி பிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா - ரூ. 200/-

VOl : 10 Issue No : 08 August 2024 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-

பாண்டிச்சேரியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் தேவன் செய்த மகத்தான அற்புதம்!

கேன்சர் கட்டி அற்புதமாக மறைந்தது!

என் பெயர் சங்கீதா. எனக்கு தொண்டையில் ஒரு பெரிய கட்டி இருந்தது. பரிசோதித்து பார்த்தப்பொழுது கேன்சர் நோய்க்குரிய symptom இருக்கிறது என மருத்துவர்கள் கூறினார்கள். கழுத்துப்பகுதியின் வெளியில் தெரியும் அளவிற்கு அந்த கட்டி மிகவும் பெரிதாகவே இருந்தது.

2023–ம் ஆண்டு பாண்டிச்சேரியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நான் வந்தேன். செய்தி முடிந்து ஜெப வேளையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கேன்சர் நோயினால் கஷ்டப்படுகிறவர்களுக்காக விசேஷித்த ஜெபத்தை அந்த நாளில் ஏறெடுத்தார்கள். நானும் விசுவாசத்துடன் என் தொண்டையில் கை வைத்து ஜெபித்தேன். தனி ஜெபத்திலும் என் மேல் கை வைத்து சகோதரர் ஜெபித்து அனுப்பினார்கள். கூட்டம் முடிந்து வீட்டிற்கு வந்தவுடன் பார்த்தேன். அந்த கட்டி முற்றிலுமாக என் கழுத்துப்பகுதியிலிருந்து மறைந்திருப்பதை பார்த்து ஆச்சரியப்பட்டேன். அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். பாரத்துடன் ஜெபித்து அனுப்பிய ஐயா அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

– திருமதி. சங்கீதா, கடலூர்.

இரண்டு குழந்தைகளை கர்த்தர் கொடுத்தார்!

என் தாய் மாமாவைதான் நான் திருமணம் செய்துக்கொண்டேன். கருவுற்று பிரசவ நேரத்தில் குழந்தையின் தலை பெரிதாக இருக்கிறது என சொல்லி எனக்கு ஆப்ரேஷன் செய்து ஆண் குழந்தையை எடுத்தார்கள். ஒரு மாதத்திற்கு பின் குழந்தை இறந்துவிட்டான். அதனால் நாங்கள் அனைவரும் அதிக வேதனையுடன் இருந்தோம். அந்த நேரத்தில் வேலூரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். தனி ஜெபத்தில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என்னைப் பார்த்து, மகளே கவலைப்படாதே, கர்த்தர் உனக்கு ஒரு பெண் குழந்தையையும், ஒரு ஆண் குழந்தையையும் தருவார் என சாதாரணமாக சொல்லி அனுப்பினார்கள். கர்த்தர் அவர்கள் வார்த்தையின்படியே எனக்கு இரண்டு குழந்தைகளை தந்து ஆசீர்வதித்துள்ளார். எங்கள் துக்கத்தை மாற்றிய கர்த்தரை துதிக்கிறேன்.

– திருமதி. உஷா மகிமை, ஓசூர்.

அன்பரின் ஊழியம்

♦ மலர் : 10 ♦ ஆகஸ்ட் 2024 ♦ இதழ் 8

உங்கள் ஆசிரியரிடமிருந்து...

Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் ஒவ்வொருவருக்கும் நம் தேவாதி தேவனும், நம் கர்த்தாதி கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

நம் அனைவருடைய வாழ்க்கையிலும் எதிர்பாராத நேரத்தில் திடீரென ஏற்படுகிற பிரச்சனைகள், போராட்டங்கள், இழப்புகள் வாழ்வையே தலைகீழாக மாற்றிவிடுகிறது. அதேபோல உலகெங்கும் கர்த்தருடைய வருகையைக்குறிக்கும் வண்ணமாக பல ஆச்சரியமான காரியங்கள் நடப்பதை நாம் பார்க்கிறோம். கடந்த மாதத்தில்கூட MicroSoft Company-ன் Cloud Computing platform திடிரென்று செயலிழந்து போனதை நாம் அறிவோம். இதனால் விமான சேவை மற்றும் பல கம்பெனிகளின் சேவைகள் அனைத்தும் நின்றுபோனது. இவை அனைத்தும் சம்பவிக்கும் என்பதை தேவன் முன்கூட்டியே தன் பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தி இருக்கிறார். இருப்பினும் கர்த்தர் தம் பிள்ளைகளுக்கு எந்த பாதிப்பும் நேரிடாமல் பாதுகாத்தார்.

அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. யோவான் 1:4 உலகமே இருளுக்குள் போனாலும் அவருடைய ஜீவன் நமக்குள் இருக்கிறது. அந்த ஜீவன் ஒளியாயிருக்கிறது. அவர் அழிந்து போவதில்லை ஆகவே நாமும் அழிந்து போவதில்லை, அவரை இருள் மேற்கொள்ளமுடியாது. அவ்வாறு நம்மையும் இருள் மேற்கொள்ளமுடியாது. ஆகவே என்ன நேர்ந்தாலும் உற்சாகமாயிருங்கள். தைரியமாயிருங்கள்.

ஜூலை மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். ஆகஸ்ட் மாதம் திருநெல்வெலி, மதுரை, செகந்திராபாத் மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். அந்தந்த ஊரில் உள்ள பங்காளர்கள் அனைவரும் தவறாமல் அந்த கூட்டங்களில் கலந்துக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை நினைத்து கூட்டங்களை தாங்குங்கள். கூட்டத்தின் வாயிலாக சந்திக்கப்படுகிற ஆத்துமாக்களை கர்த்தர் உங்கள் கணக்கில் எடுத்துக் கொள்வார்.

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627
Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி – 620 003.
Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

ஊழியத்திற்கான புதிய கணினிகள் மற்றும் Software updation செய்யவும் பல இலட்சங்கள் தேவைப்படுகிறது. உங்கள் சார்பாகவும், உங்கள் குடும்பத்தின் சார்பாகவும் ஒரு கணினி வாங்குவதற்கு உதவி செய்யலாம் அல்லது உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்பி தாங்கலாம்.

Ministry of Jesus சமூக வலைதளம் வாயிலாக வெளிவருகிற அனைத்து நிகழ்ச்சிகளையும் தவறாமல் பார்த்து subscribe செய்யுங்கள். உங்கள் நண்பர்களுக்கு share பண்ணுங்கள்.

எங்கள் அப்பா அம்மா இருவருக்கும் கர்த்தர் நல்ல ஆரோக்கியத்தைத் தந்து, கர்த்தரே அவர்களுடைய பெலனாக இருந்து காத்துக்கொள்ள தொடர்ந்து ஜெபியுங்கள். ஊழியத்தில் கர்த்தர் எங்கள் அனைவரையும் இன்னும் வல்லமையாக பயன்படுத்தும்படி ஜெபியுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்
Dr. ஜேன் ஜாஷ்வா
jane@mojindia.org

இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்

ஏசாயா 46:3-4; ஏசாயா 26:3; எசேக்கியேல் 17:24; பிலிப்பியர் 4:6-7

சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார்

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே!

கர்த்தர் தந்த இந்த மாபெரும் ஊழியத்திற்காக ஜெபம் செய்து, தாங்கி வருகிற அன்பான தேவ பிள்ளைகளே! கிறிஸ்து இயேசுவிற்குள் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இந்தப் பத்திரிக்கை வாயிலாக உங்களோடு பேசுவதில் அதிக மகிழ்ச்சி யடைகிறேன்.

மனிதனுடைய வாழ்க்கையானது நடைபாதை களில், காட்டுப்பகுதிகளில், தோட்டங்களில் விளைகின்ற புல்லுக்கு ஒப்பாக இருக்கிறது. வெளியின் புஷ்பத்தை போல காலையில் மலர்ந்து மாலையில் இருந்த இடம் தெரியாமல் அழிகிறதாக இருக்கிறது. மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது, வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று, அது இருந்த இடமும் இனி அதை அறியாது. சங்.103:15–16. இது எத்தனை உண்மையான வார்த்தை. ஆம் பிரியமானவர்களே! நம்முடைய வாழ்வில் நேற்று இருந்தவர்கள் இன்று இல்லை. சிலர் அன்றுதான் தன் சிநேகிதரை பார்த்திருப்பார்கள். ஆனால் அடுத்த நாள் அந்த சிநேகிதர் இருக்க மாட்டார்கள். எல்லா மனிதர்களுடைய வாழ்க்கையும் இப்படித்தான் உள்ளது. நாம் மண்ணென்று நம்மை உருவாக்கின கர்த்தர் நினைவு கூறுகின்றார். இருந்தாலும் தமக்கு பயந்தவர்கள் மேல் தம்முடைய அளவில்லாத கிருபையை, நீதியை ஊற்றுகிறார். அவருடைய உடன்படிக்கைகளை கைக்கொண்டு அவருடைய கட்டளையின்படி செய்ய நினைக்கிற வர்கள் மேல் அவருடைய கிருபை எப்பொழுதும் இருக்கிறது. (சங்கீதம் 103:18)

இந்த கடைசி காலங்களிலும் நாம் அவருடைய அளவற்ற கிருபையை, இரக்கத்தை, நீதியை, சத்தியத்தை நம்பியே வாழ வேண்டும். அவர் மேல் வைக்கும் இந்த அபார நம்பிக்கை நம்மை ஒருபோதும் வெட்கப்பட்டுப் போகச்செய்வதில்லை. “உம்மை நம்பி வெட்கப்பட்டுப்போகாதிருங்கள்” (சங்கீதம் 22:5)

சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்; அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான். (தானியேல் 6:22)

இந்த மாதம் நான் உங்களுக்கு என்ன செய்தி கொடுக்க வேண்டும் என்று தேவ சமூகத்தில் காத்திருந்தப்பொழுது எனக்கு கொடுக்கப்பட்ட செய்தியை மேலே உள்ள வசனங்களில் நீங்கள் காணலாம். தானியேலுக்கு நேரிட்ட மரண ஆபத்திலிருந்தும், பயங்கரமான உபத்திரவங் களிலிருந்தும் கர்த்தர் அவனை எப்படி ஆச்சரியமாக விடுவித்தார் என்பதை அறிய முடியும். தானியேல் என்றால் சர்வவல்ல தேவன் எனக்கு நீதி செய்வார் என்று அர்த்தம். தானியேலின் புத்தகத்தில் வருகிற காரியங்கள் கிறிஸ்துவுக்கு முன் 605 ஆண்டுகளுக்கு முன்னிருந்து 510–ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தாகும். 70 நாடுகளை அரசாண்ட நேபுகாத்நேச்சார் என்னும் பேரரசனால் சிறைபிடிக்கப்பட்டவர்களே தானியேலும் அவன் சிநேகிதர்களும் ஆவார்கள். அவர்களுடைய ராஜாவாகிய யோயாக்கீமும் நேபுகாத்

நேச்சரால் சிறைபிடிக்கப்பட்டார். அந்த காலத்தில் பேரரசர்கள் இன்னொரு நாட்டின் ஜனங்களை மேற்கொள்ளும்பொழுது அந்த நாட்டை தனது இரும்பு கரங்களுக்குள் கொண்டு வரும்பொழுது லட்சக் கணக்கான மக்கள் ஈவு இரக்கம் பாராமல் கொலை செய்யப்படுவார்கள். சிறைபிடிக்கப்பட்ட மற்றவர்கள் அடிமைகள் ஆக்கப்படுவார்கள். அதின் கொடுமையை நான் விவரித்துச் சொல்லமுடியாது. பொதுவாகவே பேரரசனின் ராணுவத்தினர் இந்த அடிமைகளை நிர்வாணமாக்கி ஒரு கண்ணை பிடுங்கி விடுவார்கள். இரண்டு கைகளில் உள்ள கட்டை விரலை வெட்டி விடுவார்கள். கடுமையான சாட்டை அடிகளுக்கும், உபத்திரவங்களுக்கும், வேலைகளுக்கும் உட்படுத்தப் படுவார்கள். இப்படியாக பல ஆயிரக்கணக்கான மக்களை நேபுகாத்நேச்சார் என்னும் பேரரசன் சிறைப்பிடித்து அடிமையாக்கி அதில் ஒருசிலரை (யோயாக்கீம் என்னும் ராஜாவின் உறவினர்கள், ராஜகுலத்தார், துரை மக்கள்) விசேஷமாக கண்காணிக்கவும், தன்னுடைய உபயோகத்திற்காக அவர்களுக்கு பாபிலோன் தேசத்தில் சகலவிதமான கலைகள், பாஷைகள் மற்றும் எழுத்துக்களை கற்றுக் கொடுக்கவும் வைக்கிறான். சரித்திரப்படி அப்பொழுது தானியேலின் வயது 23 முதல் 26 இருக்கலாம் என்று கருதப்படுகிறது. தானியேலும், அவன் சிநேகிதர்களும் அழகாய் இருந்தார்கள். சகல ஞானத்திலும் தேறினவர்களாயும், அறிவில் சிறந்தவர்களாயும், கல்வியில் நிபுணர்களாகவும், ராஜ அரண்மனையில் சேவிக்கக்கூடிய திறமை உள்ளவர்களாயும் இருந்தார்கள். ராஜா மற்றும் மேற்பார்வை பார்க்கும் பிரதானிகளின் தலைவன் என்ன சொல்கிறார்களோ அதன்படி கீழ்ப்படியவேண்டும். இல்லை என்றால் ஒரு நிமிடத்தில் கொலை செய்துவிடுவார்கள். இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையில் தானியேல் எங்கு போனாலும், என்ன செய்தாலும் கர்த்தர் அவனோடு கூட இருந்தார்.

தானியேலிடம் காணப்பட்ட உயர்ந்த பண்புகள்

1) அவன் ராஜ அரண்மனையில் அதிகாரத்திற்கும், யோசனைக்கும் கீழ்ப்பட்டிருந்தாலும் சின்ன சின்ன விஷயங்களில்கூட அவன் தைரியமாக செயல் பட்டான். முதலாவது, கர்த்தருக்கு பயப்படும் பயம் அவனுக்குள் இருந்தது. அந்த பயத்தினால் கர்த்தருக்கு விரோதமான காரியங்களை மற்றும் தன்னை தீட்டுப்படுத்தக்கூடிய உணவுகளை வேண்டாம் என துணிந்து கூறுவதில் உறுதியாய் இருந்தான். (தானியேல் 1:8) தேவனுக்கு பயப்படும் பயம் தானியேலுக்கு வாலிப வயதிலிருந்து முதிர் வயது வரைக்கும் இருந்தது. 127 நாடுகளுக்கு (மேதிய, பெர்சிய அரசன்) ராஜா, ராணிக்கு அடுத்து மூன்றாவது தலைவனாக தானியேல் உயர்த்தப் பட்டாலும் தனக்கு கொடுக்கப்பட்ட உயர் பதவியில் எந்த நீதி கேடும் அவன் செய்யவில்லை.
2) என்ன நடந்தாலும் ஒரு நாளில் மூன்று முறை ஜெபிக்க வேண்டும் என தீர்மானித்தான். (தானியேல் 6:10)
3) உபவாசம் இருந்து ஜெபிக்க கற்றுக் கொண்டான். (தானியேல் 9:3)
4) கர்த்தர் செய்த அற்புதங்களுக்காக, கொடுத்த வெளிப்பாடுகளுக்காக தேவனை புகழ்ந்து துதித்தான்.
5) ராஜாவின் உக்கிர கோபம் தானியேலின் சகோதரர் களை தாக்கியபொழுது தைரியமாக செயல் பட்டார்கள். மரணமே நேரிடுவதாக இருந்தாலும் ஜீவனுள்ள தேவனுக்காக வைராக்கியமாக நின்றார்கள். (தானியேல் 3:15–18)
6) முதலாவது, தானும், தன் சகோதரர்களும், எருசலேமின் குடிமக்களும் செய்த பாவங்களை கர்த்தர் மன்னிக்கவும் கர்த்தருடைய இரக்கங்களை

பெறவும் மன்றாடி ஜெபிக்கிறவனாக இருந்தான். (தானியேல் 9:1–9)

7) எரேமியா தீர்க்கதரிசியால் சொல்லப்பட்ட வாக்குத் தத்த வசனங்களை உறுதியாக பற்றிப் பிடித்தான். 70 வருடம் கழித்து கர்த்தர் அவனுக்கு இரங்கி தமது மக்கள் செய்த பாவங்களை மன்னித்து அடிமைத் தனத்திலிருந்து விடுவிப்பார் என்று நம்பினான். (தானியேல் 9:1–3)

8) கர்த்தருக்கு முன்பாக எல்லா காரியத்திலும் குற்ற மற்றவனாக காணப்பட்டான். இதனிமித்தம் எல்லா சூழ்நிலையிலும் தேவ இரக்கத்தையும் கிருபை யையும் அளவு கடந்த வல்லமையையும் பெற்றான். தானியேலின் வயது சென்ற காலத்தில் (சரித்திரப்படி 90 வயதுக்கு மேல் என்று கருதப் படுகிறது) அவனை மிகவும் நேசித்த மிகப்பெரிய வல்லரசன் ஆன தரியு முன்னிலையில் மிகப்பெரிய சோதனை ஒன்று ஏற்படுகிறது. அதாவது அந்நியன் ஒருவன் இவ்வளவு உயர்த்தப்பட்டு இருக்கிறானே என்று தேசாதிபதிகளும், பிரதானிகளும் நினைக் கிறார்கள். ஆனால் அவர்களால் தானியேலிடம் எந்த ஒரு குற்றத்தையும் கண்டுபிடிக்க முடிய வில்லை. பொதுவாகவே இப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் இருக்கிறவர்கள் பயங்கரமாய் லஞ்சம் வாங்குவார்கள், கொள்ளையடிப்பார்கள். தேசாதி பதிக்கு எதிராக சூழ்ச்சி செய்வார்கள். எளியவர் களை கொடுமைப்படுத்துவார்கள். தங்களுக்கு ஆதரவாக இருக்கிற மக்களை மாத்திரம் உயர்த்து வார்கள். இதுவெல்லாம் இந்த காலத்திலும் நாம் சகஜமாய் பார்க்கிறோம்.

என் அன்பு வாலிப பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கையிலும் தானியேலை போல எல்லா சூழ்நிலையிலும் நீங்கள் வெற்றி பெற வேண்டு மானால் முதலாவது உங்களுக்கு தேவ பயம் வேண்டும். ஆகவே உங்கள் வாலிப வயதில் தேவனுக்கு பயந்து நடப்பேன் என்று தீர்மானியுங்கள். உங்களை தீட்டுப்படுத்தும் காரியங்களை விட்டு விலகியிருப்பதில் எப்பொழுதும் கவனமாய் இருங்கள்.

என்னுடைய இளம் வயதில் நானும் தேவனுக்கு பயந்து நடக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். "கர்த்தருக்கு முன்பாக தீமையாக இருக்கும் எந்த பாவத்தையும் நான் செய்யக்கூடாது. உதாரண மாக, மது அருந்தக்கூடாது, பெருந்தீனிக்காரனாய் இருக்கக்கூடாது, சிகரெட், கஞ்சா போன்ற பொருட் களை தொடக்கூடாது, நமது குணாதிசயங்களை கெடுக்கின்ற வேண்டாத சினிமாக்கள் பார்க்கக்கூடாது, பெரியவர்களை கேலி செய்யக்கூடாது, என்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட வாலிப தம்பிமார்களை, வாலிப பிள்ளைகளை சகலவிதமான கனத்தோடு தேவனுடைய பிள்ளைகளாக நடத்த வேண்டும், எத்தனை துன்பங்கள், விரோதங்கள் வந்தாலும் மனிதரால் உருவாக்கப்பட்ட காரியங்களின் கிரியை களையும், வானத்தின் விண்மீன்களையும், ஆண், பெண் உருவங்களையும், ராட்சஷமிருகங்களையும், பறவைகளையும் சிறிதேனும் வணங்கக்கூடாது என்றும், கண்டிப்பாக ஒரு நாளுக்கு குறைந்தது இரண்டரை மணி முதல் மூன்று மணி நேரம் வரைக்கும் தேவனை தேட வேண்டும்" என்றும் தீர்மானித்தேன்.

தாய் தகப்பனற்ற எனது பரிதாப நிலையை பயன்படுத்தி என்னை கொடுமைப்படுத்தி, அடிமைத் தனத்திற்குள் கொண்டு போக வேண்டும், மேற் படிப்பிற்கு தடை செய்து, என்னை அழித்து விட வேண்டும் என பெருமையோடு இருந்த எஜமான் களுக்கு முன்பாக, நான் மேற்படிப்பை படித்து முடித்து, அளவில்லாத கிருபையினாலும், ஞானத்தினாலும், உண்மையினாலும் உயர்ந்திருக்க தேவன் எனக்கு கிருபை செய்தார்.

ஆம் அன்பானவர்களே! நீங்களும் தானியேலை போல வாழ தீர்மானியுங்கள். சிங்கக்குகையில் வெகு நாட்கள் பசியோடு இருந்த சிங்கங்களின் வாய்களை தேவன் தாமே தமது தூதனை அனுப்பி கட்டிப்போட செய்தார்.அதனால் அவைகள் தானியேலை ஒன்றும் செய்யவில்லை.

சிங்கம் என்று சொல்லும் பொழுது பயங்கரமான காட்டில் ராஜாவாக வாழும் ஒரு கொடுமையான மிருகம். ஒரு மனிதனை கண்டால் அவை ஒரு நிமிடத்தில் சின்னா பின்னமாக்கி விடும். எலும்புகள் எல்லாவற்றையும் தின்றுவிடும். அவ்வளவு பயங்கரமான சிங்கங்களை நாம் கண்டாலே பயந்து விடுவோம். அந்த பயத்திலேயே நாம் இறந்து விடுவோம்.

என்னுடைய சிறு வயதில் ஒரு நாள் காட்டிற்குள் சென்றப்பொழுது பயங்கரமான சிறுத்தை என்னை தாக்க வந்தது. எப்படி இருந்திருக்கும் என்று யோசித்து பாருங்கள். இன்னொரு முறை நாங்கள் சிறுவர் விடுதியில் கேரம்போர்டு விளையாடிக் கொண்டிருந்தோம். எங்களை மிகவும் அன்பாக வழி நடத்தின செரதா அண்ணாச்சி, "ஐயோ தம்பிமார்களே ஹாலை விட்டு இருமுக்கிலும் உள்ள அறைக்குள் ஓடிப்போய் தாழிட்டு கொள்ளுங்கள்" என்றார். உடனே நாங்கள் கீழ்ப்படிந்து ஓடி ஒளிந்து கொண்டோம். அந்த ஹால் திறந்த வெளியாக இருந்தபடியால் முதலாவது மான் வந்தது, அதைத் தொடர்ந்து புலி விரட்டுவதையும் கண்டேன். அந்த சம்பவத்தை என்னால் மறக்கவே முடியாது.

ஒரு சமயம் நான் தனியாக ஒரு பள்ளத்தின் படிகளில் இறங்கி (மீண்டும் மேலே ஏறினால் எங்களுக்கு நியமிக்கப்பட்ட ஜெப அறைக்கு போக முடியும்) கொண்டிருக்கும் பொழுது சுமார் மாலை 7 மணி இருக்கும், பத்து படிகள் தான் இறங்கினேன். அங்கே ஒரு சிறுத்தை என் மேல் பாய காத்திருந்தது. அப்பொழுது காட்டில் பல்வேறு ஆபத்துகளிலிருந்து எப்படி தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று நன்றாய் அறிந்த பழக்கப்பட்ட ஒரு அண்ணாச்சி ஓடி வந்து தன்னுடைய கையில் இருந்த பிரகாசமான டார்ச் லைட்டை சிறுத்தையின் கண்களில் அடித்தார். அதனால் சிறுத்தையால் நகர முடியவில்லை. எனினும் சிறுத்தைக்கும் எனக்கும் 10 அடி தூரம் தான் இருக்கும். அவர் லைட் அடித்துக்கொண்டே இருந்தார். நானும் இயேசப்பா என்னை காப்பாற்றும் என்று ஜெபித்துக் கொண்டே அந்த அண்ணாச்சியின் அறிவுரையின்படி நான் மெதுவாக மேலே வந்து விட்டேன். அந்த மிகப்பெரிய ஆபத்திலிருந்து தேவன் என்னை காப்பாற்றினார். 1சாமுவேல் 17:34–37–ல் இளைஞனாகிய தாவீதை கர்த்தர் எப்படி சிங்கத்தின் வாயிலிருந்து, கரடியிடமிருந்து தப்புவித்தாரோ அதேபோல உங்களையும் தப்புவிப்பார். (சங்கீதம் 91:13)

முதலாவதாக, பிசாசானவன் கர்ஜிக்கிற சிங்கம் போல கர்த்தருடைய பிள்ளைகளை வீழ்த்துவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக காத்திருக்கிறான். (1பேதுரு 5:8) எப்படிப்பட்ட தேவனுடைய ஊழியக் காரனும் சறுக்கி விழுவதற்காக பதுங்கி காத்து கொண்டிருப்பான். தாவீதின் வாழ்க்கையிலும், பேதுருவின் வாழ்க்கையிலும் இது எத்தனை உண்மை என்று நாம் கண்டுகொள்ளலாம்.

சீஷனாகிய பேதுரு, இயேசுவை மேசியா என்றும், கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரன் என்றும் அறிக்கை செய்தவன். (யோவான் 6:69; மத்தேயு 16:16) இயேசுகிறிஸ்து உயர்ந்த மலையில் மகிமையாக விளங்கினதையும், அவரோடு மோசேயும், எலியாவும் பேசினதையும் கண்டவன் பேதுரு (மத்தேயு 17:1–7) இயேசு கிறிஸ்துவோடு மூன்றரை ஆண்டுகள் இருந்தவன். அவர் செய்த பலத்த அற்புதங்களை கண்கூடாக கண்டவன். எனினும் பாருங்கள், பிசாசு பேதுருவுக்கு விரோதமாக செயல்பட்டு, சிங்கங்களை போன்ற துன்மார்க்கர் கையில் பேதுருவை சிக்க வைக்கின்றான். இதனிமித்தமாக பேதுரு யாரும் எதிர்பாராத வகையில் இயேசுவை சபிக்கவும், அவரை நான் அறியவில்லை என்று பொய் சொல்லவும் வைக்கிறான். மொத்தமாக இயேசுவை மறுதலிக்கிறான். (மத்தேயு 26:69–75). எனினும், மிகுந்த அன்பும் கிருபையும் உள்ள இயேசு அவனை வெறுத்துவிடாமல் அன்போடு பார்க்கிறார். இயேசுவின் கண்கள் பேதுருவை பார்த்தது. அந்த கண்கள் அவன் மனசாட்சியோடு பேசியது. அவன் தன் துரோகத்தையும், பாவத்தையும் உணர்ந்து மனங்கசந்து அழுது

மன்னிப்பு கேட்டான். கர்த்தர் அவனை மன்னித்து உயர்த்துகிறார்.

ஆம் எனக்கன்பானவர்களே! நீங்களும் கர்த்தருக்கு பயந்து நடந்து, தாகத்தோடு பெரிய பெரிய காரியங்களை அவருடைய நாமத்தின் புகழ்ச்சிக்காக செய்திருக்கலாம். எனினும் கர்ஜிக்கிற சிங்கங்கள், சாத்தானின் சோதனைகள் பெருவெள்ளம் போல உங்களை எதிர்த்து வந்ததினால், நீங்கள் செய்வதறியாது திகைத்து, பயந்து, கொடிய அகழியில், நம்பிக்கையற்ற சூழலில் விழுந்திருக்கலாம். சோர்ந்து போகாதிருங்கள். கர்த்தருடைய சிலுவையின் அன்பை நோக்கிப்பாருங்கள். தானியேலை போல பாவ அறிக்கை செய்யுங்கள். கர்த்தருடைய ஜெபத்தை அனுதினமும் மூன்று வேளையும் செய்யுங்கள். அவருடைய இரத்தத்தால் கழுவப்படுங்கள். அப்பொழுது சோதனைக்காரனாகிய சாத்தான் தோற்றுப் போய் விடுவான். ... வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார் – ஏசாயா 59:19

இரண்டாவதாக, எந்த ஒரு காரணமும் இல்லாமல் நம்மை வீழ்த்த வேண்டும் என்று நினைக்கிற சத்துருக்கள் சிங்கங்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள். நன்மைக்கு தீமை செய்கிறவர்கள் இந்த கடைசி காலத்தில் பெருகி இருக்கிறார்கள். கிறிஸ்துவின் நிமித்தம் பல உபத்திரவங்களையும், கொடுமைகளையும் நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். சுகமளிக்கும் அற்புத கூட்டங்களை நடத்தும் எனக்கே பலவிதமான வியாதிகள் தாக்குகிறது. கேன்ஸர், சிறுநீரகக் கோளாறு, இதய கோளாறு, பக்கவாதங்கள், மூளை கோளாறுகள், தீராத தோல் வியாதிகள், குடல் சம்பந்தப்பட்ட வியாதிகள், எலும்பு வியாதிகள் போன்றவை உங்களை தாக்கியிருக்கலாம். மூன்று வேளை ஜெபித்தும் தொழில் முடக்கம் ஏற்பட்டிருக்கலாம். வீட்டில் இருக்கும் உங்கள் பிள்ளைகள் அல்லது திருமணம் செய்து கொடுத்த இடத்தில் உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகள், கஷ்டப்பட்டு உருவாக்கின உங்கள் சபைகளில் ஏற்படும் பிளவுகள் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கலாம், மனங்கலங்காதீர்கள்! இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உங்களை ஒருபோதும் கைவிட மாட்டார். விசுவாசத்தில் உறுதியாக இருங்கள். கர்த்தருடைய ஜீவ நதியாகிய அபிஷேகத்தில் பெருகுங்கள். இடைவிடாமல் ஜெபியுங்கள்! (தானியேல் 3:17,18; 6:10; 1 தெச. 5:17,18; தானியேல் 5:11,14; 4:8) உங்களை சார்ந்த குடும்பத்தினருக்கும், பெரியோருக்கும் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். அப்பொழுது அவர் உங்களை எல்லா உபத்திரவங்களில் இருந்தும் மீட்டுக்கொள்வார். தானியேலை விடுவித்த தேவன் உங்களையும் விடுவிப்பார்.

உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார் – சங்கீதம் 22:24

ஒரு சமயத்திலே வாலிபன் ஒருவன் தேவனுடைய விசேஷித்த அபிஷேகத்தை பெற்று ஊழியத்தை செய்ய ஆரம்பித்தான். வாலிபனாக இருந்தபடியால் பல எதிர்ப்புகள் அவனுக்கு வந்தது. பலவிதமான அவதூறு பேச்சுகளை அவன் கேட்க வேண்டியதாயிற்று. அவன் கூடவே மனைவி இருந்தும் தவறாக அவனை குறித்து பேசினார்கள், புகார் கொடுத்தார்கள். எப்படியாவது இந்த வாலிபன் ஊழியம் செய்யாதபடிக்கு தடுத்து பொய் குற்றச்சாட்டு சொல்லி சிறையில் அடைக்க வேண்டும். அவன் பிரசங்கிக்கும் பொழுது அவன் மேல் கல்லெறிந்து கொலை செய்ய வேண்டும் என்றெல்லாம் கங்கணம் கட்டினார்கள். இந்த வாலிபனுக்கு இவைகள் தேவனால் வெளிப்படுத்தப்பட்டபடியால் அவன் அதைக் குறித்து அதிகமாக கவலைப்படவில்லை. ஊழியத்தை தொடராதபடிக்கு அநேக கிறிஸ்தவர்

களே அவனுக்கு எதிராக மாறினார்கள். இது எப்போதும் நடக்கிற ஒன்று தான். ஒரு வாலிப பெண்ணோ, ஒரு வாலிபனோ அல்லது இளம் தம்பதி களோ ஊழியம் செய்யும்பொழுது, தீர்க்கதரிசனம் சொல்லும்பொழுது, இயேசு நாமத்தில் அற்புதங்கள் நடக்கும்பொழுது,மக்களால் அவர்கள் ஊழியம் போற்றப்படும்பொழுது காழ்ப்புணர்ச்சி உள்ளவர்கள் அவர்களுக்கு எதிராக பல தீமையான காரியங்களை செய்து அவர்களை துன்பப்படுத்துவார்கள். அவ்வாறு இந்த வாலிபனுக்கும் துன்பங்களை கொடுத்தார்கள். எனினும், கர்த்தர் அந்த வாலிபனை நோக்கி, "நான் சொல்லும் பட்டணத்திற்கு போ" என்றார். அந்த வாலிபனும் கீழ்ப்படிந்து சென்றான். என்ன ஆச்சரியம் பாருங்கள்! ஊழியம் செய்ய ஆரம்பித்தான், சில வருடங்களில் அந்த வாலிபனின் சபை வளர்ந்தது, சபை அங்கத்தினர்களாக 15,000 பேர் சேர்ந்தனர். மாபெரும் ஆசீர்வாதத்தை கர்த்தர் அந்த வாலிபனின் ஊழியத்தில் கட்டளையிட்டார்.

பிரியமான பிள்ளைகளே! ஒரு வழி அடைத்தால் கர்த்தர் நமக்கு ஏழு வழிகளை திறப்பார். நிச்சயமாய் எப்படிப்பட்ட கொடுமையான சிங்கங்களும் நம்மை சேதப்படுத்தாதபடிக்கு கர்த்தருடைய தூதர்கள் எப்பொழுதும் நம்மோடுகூட இருப்பார்கள். சற்று யோசித்து பாருங்கள்! தானியேல் ஒரு வயோதிப மனிதன். உடல் ஒடுங்கின மனிதன். இவரை அந்த சிங்கங்கள் கடித்து குதற எவ்வளவு நேரமாகும். ஆனால் அதற்கு நேர்மாறாக அவைகள் அனைத்தும் ஆட்டுக்குட்டியை போல அவன் பாதத்தில் அமர்ந்திருப்பதை நாம் பார்க்கிறோம். தேவன் அவைகளின் வாயை கட்டினது மாத்திரமல்ல, அவைகளோடு பேசியிருப்பார். என்ன பேசியிருப்பார், "காட்டு சிங்கங்களே, நீங்கள் பசியோடு இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களுக்காக இன்னொரு நல்ல உணவு காத்திருக்கிறது, என் தாசனாகிய தானியேலை தேசாதிபதிகளிடத்தில் அவன் ஜெபத்தை குறித்து குறை சொல்லி உங்கள் மத்தியில் போட வைத்த அந்தசத்துருக்கள் அநேகம் பேர் உங்களுக்கு உணவாக கிடைப்பார்கள். எனவே கொஞ்சம் இந்த இரவு மாத்திரம் காத்திருங்கள்" என்று கர்த்தர் பேசியிருப்பார். அப்படியே அவைகளும் கீழ்ப்படிந்தன. இயற்கைகள் தேவனுக்கு கீழ்ப்படியும். நடந்தது என்ன? அதிகாலையில் தேவ தாசனாகிய தானியேல் விடுவிக்கப்பட்டான். தானியேலுக்கு எதிராக செயல்பட்ட அந்த சத்துருக்களை சிங்கக்கெபியில் போட்டார்கள். ஒரு எலும்பு கூட மிச்சம் இல்லாதபடி அனைத்தையும் சிங்கங்கள் தின்று தீர்த்துவிட்டது. தானியேலின்மேல் குற்றஞ்சாற்றின மனுஷரையோ வென்றால், ராஜா கொண்டுவரச் சொன்னான், அவர்களையும் அவர்கள் குமாரரையும் அவர்கள் மனைவிகளையும் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள், அவர்கள் கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள்மேல் பாய்ந்து, அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டது. (தானி.6:24)

பல வருடங்களுக்கு முன் ஆப்பிரிக்க காடுகளின் அடிவாரத்தில் தேவனுக்கு பயந்த தம்பதிகள் தங்கள் பிள்ளைகளோடு வாழ்ந்து வந்தனர். குடும்ப தலைவன் அடிக்கடி காட்டிற்கு சென்று அவர்களுக்கு தேவையான இறைச்சியாக சில சிறிய பிராணிகளையும், அரசாங்க சட்டப்படி கொக்கு போன்ற பறவைகளையும் வேட்டையாடி கொண்டு வருவார். ஒரு நாள் தகப்பன் காட்டிற்கு சென்று வெகு நேரம் ஆகி வராமல் இருந்ததை கண்ட அவர்களது 7 வயது சிறுமி யாருக்கும் தெரியாமல் அப்பாவை தேடி காட்டிற்குள் சென்றாள். முதலாவது குறிப்பிட்ட சிலர் அந்த காட்டை தாண்டுவதற்கு பயன்படுத்திய ஒற்றையடி பாதையில் சென்றாள். நிலா வெளிச்சமும் இருந்தது. மிருகங்களின் சத்தமோ சிறுமிக்கு கேட்க வில்லை. சிறுமி பாட்டு பாடிக்கொண்டே சென்றாள். திடீரென்று பயங்கரமாக உருமுகிற சத்தம் கேட்டது. என்ன என்று பார்த்தபொழுது ஒரு பெண் சிங்கம் தன் குட்டிகளோடு சிறுமியை எதிர்கொண்டு ஆவேசமாய் வந்தது. அப்பொழுது சிறுமி சற்றும் பயப்படாமல்

முழங்கால்படியிட்டு "இயேசுவே நீர் சொல்லியபடி, மிருகங்கள் என்னை சேதப்படுத்தக்கூடாது அவைகள் நான் சொல்கிறபடி தான் நடக்க வேண்டும்" அதை நான் பரிபூரணமாக நம்புகிறேன். இப்பொழுது எனக்கு உதவி செய்யும்! ஆமென்! என்று சொல்லி அந்த பெண் சிங்கத்தை பார்த்து நீ என்னை கடிக்கக்கூடாது, என்னை சாப்பிடவும் கூடாது, நகங்களால் என்னை கீரவும் கூடாது. அதற்குப் பதிலாக நான் வழி தவறி விட்டேன். நீ என்னை சுமந்து கொண்டு என் அப்பாவிடம் அழைத்து செல் என்று தைரியமாக கேட்டாள். சிங்கத்தின் குட்டிகளும் அதைக்கேட்டது. உடனே அந்த பெண் சிங்கம் படுத்துக்கொண்டது. இவள் அதின் முதுகில் ஏறினாள். பத்திரமாக கொண்டு போய் அவளுடைய வீட்டில் விட்டது. அந்த வீட்டிலோ கிறிஸ்துமஸ் முந்தின நாள் என்பதால் நெருப்பு எரிந்து கொண்டு இருந்தது. எல்லோரும் பாடல் பாடிக் கொண்டிருந்தனர். இந்த சிறுமியின் அப்பாவும் பிள்ளையை காணோம் என்று கலங்கி, அவளை தேடுவதற்கு ஆயத்தமாகி கொண்டிருந்தார். அவர் கையில் துப்பாக்கி இருந்தது. திடிரென்று அவர் கண்களில் சிங்கம் தென்பட்டது. முடிவில் தன்னுடைய மகள் அதின் மேல் அமர்ந்திருப்பதையும் கண்டார். ஆவேசமாய் துப்பாக்கியை எடுத்து தோட்டாவை பொருத்தி சிங்கத்தை சுட வேண்டும் என்று குறிபார்த்தார். அப்பொழுது சிறுமி "அப்பா! இந்த பெண் சிங்கத்தையும், அதின் குட்டிகளையும் சேதப்படுத்தக் கூடாது, இது தன்னை உண்டாக்கின இயேசுவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, வழி தவறிய என்னை இங்கு கொண்டு வந்தது. எனவே கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு நீங்கள் வேட்டையாடி வந்த மிருகத்தின் இறைச்சிகளை அதற்கு போடுங்கள் என்றாள். தகப்பனுக்கும், தாய்க்கும் மற்ற பிள்ளைகளுக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்படிப்பட்ட ஒரு ஆச்சரியமான காரியத்தை அவர்கள் பார்த்தனர். இந்த பெண் சிங்கம் அநேகரை கொன்று இருப்பது அவர்களுக்கு நன்கு தெரியும். தேவனுடைய அற்புதமான விடுதலையை கண்டு தேவனை ஸ்தோத்தரித்தார்கள். கிறிஸ்துமஸ்க்கு தாங்கள் வைத்திருந்த இறைச்சிகளை எல்லாம் அந்த பெண் சிங்கத்திற்கும், குட்டிகளுக்கும் கொடுத்தனர். சிங்கமும் சிறுமியை பார்த்து பத்திரமாய் போய் வா என்று சொல்வது போல தன் கண்களை அசைத்தது. இது நடந்த ஒரு உண்மை சம்பவம். அந்த சிறுமியை காப்பாற்றிய ஜீவனுள்ள தேவன் தாமே உங்களையும் பொல்லாத சத்துருக்களின் கைகளுக்கு விலக்கி தப்புவிப்பார், பாதுகாப்பார், உயர்த்துவார். அல்லேலூயா! ஆமென்!

dranandastira@mojindia.org

அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION
புதன்
மதியம் 12.00 – 12.30
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
ARADANA TV
வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
HARVEST TV கேரளம்
சனி
இரவு 7.30 – 8.00

2024 ஆகஸ்ட் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். (1 பேதுரு 5:6)

02 அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். (சங். 113:7)

03 இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார். (அப்போஸ். 5:31)

04 நீதிமானுடைய கொம்புகளோ உயர்த்தப்படும். (சங்.75:10)

05 பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். (லூக். 1:52)

06 தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். (மத். 23:12)

07 கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார். (சங்.147:6)

08 கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார். (யாக். 4:10)

09 என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்; புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன். (சங்.92:10)

10 அந்நாளிலே கர்த்தர் யோசுவாவைச் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாகவும் மேன்மைப்படுத்தினார். (யோசுவா 4:14)

11 அவர் உன்னை மேன்மைப்படுத்தியிருக்கிறார். (ஏசாயா 55:5)

12 ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர். (சங்.3:3)

13 தாழ்ந்தவர்களை உயரத்தில் வைத்து, துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறார். (யோபு 5:10)

14 இஸ்ரவேல் என்னும் தம்முடைய ஜனத்தினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை மிகவும் உயர்த்தினார் என்று தாவீது அறிந்து கொண்டான். (1 நாளா.14:2)

15 நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்; அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார். (சங். 37:34)

16 கர்த்தர் தரித்திரம் அடையச் செய்கிறவரும், ஐசுவரியம் அடையப் பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமானவர். (1சாமு.2:7)

17 நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார். (தானி.6:16)

18 தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக்கடவன் (யாக்.1:9)

19 என் மேன்மையைப் பெருகப்பண்ணி, என்னை மறுபடியும் தேற்றுவீர். (சங். 71:21)

20 உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். (உபா. 28:1)

21 எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். (1 நாளா. 29:12)

22 நீரே ராஜாக்களுக்கு ஜெயத்தைத் தந்து, உமதடியானாகிய தாவீதைப் பொல்லாத பட்டயத்திற்குத் தப்புவிக்கிறவர். (சங். 144:10)

23 குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும். (நீதி.21:31)

24 தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். (1யோவான் 5:4)

25 துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார். (கொலோ.2:15)

26 அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார். (சங்.72:14)

27 அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம். (2கொரி.1:10)

28 நான் உன்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து, உன்னைப் பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன். (எரே.15:21)

29 என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார். (1சாமு.17:37)

30 அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், ... ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். (சங்.91:15)

31 உங்கள் தேவனாகிய கர்த்தருக்கே பயந்து நடப்பீர்களாக; அப்பொழுது அவர் உங்கள் எல்லாச் சத்துருக்களின் கைக்கும் உங்களைத் தப்புவிப்பார். (2இராஜா. 17:39)

திருச்சியில் சிறப்பு கூட்டங்கள்

இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். இன்னிமித்தமாக, இந்தச் சிறுவரில் ஒருவரையும் கெட்டுப்போகாது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல — மத்தேயு 18:5,14

வெளியிலே சில பிள்ளைகளைக் தேவனுடைய ராஜியத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், நிலை நிதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார் — மாற்கு 10: 15,16

அருமையான தேவ பிள்ளைகளே!

இன்றைக்கு நம் இல்லங்களில் இருக்கும் சிறு பிள்ளைகள் நாளைக்கு நன்றாக வளர, குணமுள்ள பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்றெல்லாம் நீங்கள் விரும்புகிறீர்கள். அதற்கு ஏற்றபடி வளர்க்க நாம் முயற்சிக்க வேண்டும். சில பிள்ளைகள் சிறு வயதிலேயே ஆட்டிசம், ஹைபர்ஆக்டிவிட்டியினால் கஷ்டப்படுகிறார்கள். ஒரு சில பிள்ளைகள் பிராசிஸ்போராட்டத்தினால் வேதனைப்படுகிறார்கள். மற்றும் ஒரு சிலர் சமூக வலைதளங்களுக்கு அடிமைகளாகி பள்ளிக்கு போகாமல் வீட்டிலேயே முடங்கி இருக்கிறார்கள். பலவிதமான மருத்துவ முயற்சிகள் மற்றும் கவுன்சிலிங் கொடுத்தும் அதிலிருந்து விடுதலை ஆகாமல் இருக்கிறவர்கள் பலர் உண்டு. எனவே இப்படிப்பட்ட குழந்தைகளுக்காக, வாலிப தம்பி, தங்கைகளுக்காக, அவர்கள் பெற்றோருக்காக விசேஷித்த ஆலோசனை கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம். இதுபோன்ற கவுன்சிலிங் ஜெபத்தின் மூலம் சுகமான பிள்ளைகள், உயிர்மீட்சி அடைந்த பிள்ளைகள் ஏராளம், ஏராளம். எனவே இந்தருணத்தை பயன்படுத்தி ஆகஸ்ட் 17 அன்று திருச்சி ஜெப ஸ்தலத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு வரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். கூட்ட முடிவில் தேநீர், சிற்றுண்டி வழங்கப்படும்.

சிறு பிள்ளைகளுக்காக Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஏறெடுத்த ஜெபத்தின் மூலம் கர்த்தர் செய்த அற்புதங்களில் ஒரு சில....

பிசாசின் பிடியிலிருந்து மகள் விடுதலை ஆனாள்!

என் மகளிடம் ஒரு கருப்பு உருவம் வந்து மாடியிலிருந்து கீழே விழு, கீழே விழு என அடிக்கடி சொல்லி வந்தது. முதலில் நான் நம்பவில்லை. பிறகு எனக்கு பயம் வந்தது. உடனே திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு மகளை அழைத்து வந்தேன். Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என் மகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். உடனே சகோதரர் அவர்கள் என் மகளின் தலைமேல் கை வைத்து ஜெபித்து அனுப்பினார்கள். அதன் பிறகு எந்த பிசாசின் தொந்தரவும் மகளுக்கு இல்லை. தற்பொழுது இயேசுகிறிஸ்து என் மகளிடம் நீ பயப்படாதே. நான் உன் னுடன் இருக்கிறேன் என பேசுகிறார். அற்புதமாய் விடுதலையாக்கிய கர்த்தரை துதிக்கிறேன்.

-திருமதி.ராதா, திருச்சி

மனவளர்ச்சி குறைபாடு நீங்கியது!

எங்களுடைய 2-வது மகள் பிறந்ததிலிருந்து தாய்பால் குடிக்கவில்லை. அத்துடன் மூளை வளர்ச்சியும் குறைவாக இருந்தது. மகள் வளர வளர எந்த ஆகாரமும் சாப்பிடவில்லை. சாப்பாடு உள்ளே இறங்கவும் இல்லை. மகளுக்கு 3 வயது நடக்கும்பொழுது கூட்டத்திற்கு மகளை அழைத்து வந்து Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் மகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் மகளுக்காக ஜெபித்துவிட்டு மகள் சுகமாகிவிட்டாள் என சொல்லி அனுப்பினார்கள். அன்றிலிருந்து மகள் நன்றாக சாப்பிட ஆரம்பித்து விட்டாள். மூளை வளர்ச்சி குறைபாடும் நீங்கி பரிபூரண வளர்ச்சி உள்ள மகளாக இருக்கிறாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

-சகோ. டேவிட் பால், மதுரை.

திருச்சியில்
விசேஷித்த ஜெபக்கூட்டம்

குழந்தைகள் மற்றும் வாலிபர்களுக்கான ஜெப நேரம்

காலை 9:00 முதல் மதியம் 2:00 வரை

விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கான ஜெப நேரம்

மாலை 5:00 முதல் இரவு 8:00 வரை

தேவ செய்தியாளர் **Dr. ஆனந்த ஸ்திரா**

நாள் : ஆகஸ்ட் 17 (சனிக்கிழமை)

இடம் : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18

தொடர்புக்கு : 9488845627, 0431-2741922

தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கான விசேஷித்த பிரார்த்தனை!

கர்த்தர் ஆதாமை படைத்து ஏதேன் தோட்டத்தை பண்படுத்த வைத்தார். தேவனே அவன் வேலை செய்ய வேண்டும் என்று கட்டளையிடுகிறார். "ஒருவன் வேலை செய்யாதிருந்தால் சாப்பிடவும் கூடாது" என்று பவுல் விசுவாசிகளுக்கு கூறுகிறார். (2தெச.3:10) கர்த்தருக்கு ஊழியம் செய்த அப்போஸ்தலர் முதற்கொண்டு அனைவரும் வேலை செய்தார்கள் என்று நாம் பார்க்கிறோம். (1 தெச. 2:9) அன்பு பங்காளர்களாகிய நீங்கள் விவசாயம், வியாபாரம், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில், ஐடி கம்பெனிகளில் நீங்கள் பலவிதமான வேலைகளை செய்கிறீர்கள். உங்கள் பணிகளில் பலவிதமான எதிர்பார்ப்புகளை அன்றாடம் சந்திக்கலாம், கடன் பிரச்சனைகளில் சிக்கித்தவிக்கலாம், களைப்படைந்தீர்கள்! உங்களுக்காக விசேஷித்த ஜெபக்கூட்டம் ஆகஸ்ட் 17 அன்று திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் ஒழுங்கு செய்துள்ளோம். உங்களில் அநேகர் கடைசி சனிக்கிழமை அன்று நடைபெறும் கூட்டத்திற்கு வர முடியாமல் போகிறது. எனவே உங்களுக்காகவே மாதத்தின் 3ம் சனிக்கிழமை விசேஷித்த கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம். எனவே இக்கூட்டத்திற்கு பணிசெய்கிறவர்கள் மற்றும் தொழில்புரிபவர்கள் அவசியம் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். இதுபோன்ற கூட்டங்களில் கலந்து கொண்டு நன்மை அடைந்தோர் ஏராளம் ஏராளம்.

வாழ்வில் உயர்ந்தேன்!

என் பெயர் தேவதாசன். சிறிய தொழில் செய்து வந்தேன். அந்த வருமானத்தில் குடும்பத்தை நடத்துவதற்கு அதிக சிரமப்பட்டேன். ஒரு முறை கூட்டத்தில் கலந்துகொண்டு Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் நான் வாழ்வில் உயர, என் பண கஷ்டங்கள் நீங்க ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்துவிட்டு ஒரு சில ஆலோசனை சொன்னார்கள். அதன்படி நான் செயல்பட்டேன். அதன்பின் என்னுடைய தொழில் தேவ கிருபையால் உயர்ந்தது. தற்பொழுது சொந்த வீடு வாங்கவும் கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

-சகோ. தேவதாசன் ,உடுமலைப்பேட்டை.

பதவி உயர்வு கிடைத்தது!

என் பெயர் ரூபன். நான் செய்துக் கொண்டிருந்த வேலையில் எனக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை. அதனால் அதிக வேதனையுடன் இருந்தேன். ஒரு முறை கூட்டத்திற்கு வந்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என் நிலையைச் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரர் ஜெபித்து விட்டு உங்களுக்கு பதவி உயர்வு வரும். சாட்சி சொல்வீர்கள் என சொல்லி அனுப்பினார்கள். அதன்பின் உயர் அதிகாரிகளின் கண்களில் கர்த்தர் நாமே எனக்கு தயை கிடைக்கும்படி செய்து, பதவி உயர்வு மற்றும் Appraisal கொடுத்து இரட்டிப்பான ஆசீர்வாதங்களை பெற கர்த்தர் உதவிசெய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

-சகோ. ரூபன். திருநெல்வேலி

திருச்சியில்

அற்புத குடும்ப

ஆசீர்வாதக் கூட்டம்

நாள் : ஆகஸ்ட் 31 (சனிக்கிழமை)

தலைமை செய்திகொடுப்பவர்கள்

Dr. ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்

நேரம் : காலை 9:30 முதல் மதியம் 2:00 வரை

இடம் :

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, திலைநகர், திருச்சி-18

தொடர்புக்கு : 9488845627, 0431-2741922

தற்கொலை ஆவியிலிருந்து விடுதலை

அன்பரின் ஊழியத்தின் வாயிலாக ஆண்டவர் என் வாழ்வில் ஏராளமான அற்புதங்களை செய்திருக்கிறார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். என் மகன் தற்கொலை ஆவியால் அதிக கஷ்டப்பட்டான். Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கடந்த முறை ஊட்டியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப் பொழுது, என மகனுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். அன்றிலிருந்து என் மகன் தற்கொலை ஆவியின் பிடியிலிருந்து விடுதலையானான். அற்புத விடுதலை தந்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

– திரு. ஜோஸப் குமரேசன், ஊட்டி.

அக்கினி அபிஷேகத்தை பெற்றேன்!

கோயம்புத்தூரில் நடைபெற்ற அனைத்து குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கும் நாங்கள் தவறால் வந்து கலந்துக்கொள்வோம். சமீபத்தில் என் கால் உடைந்துப் போன காரணத்தினால் என்னால் கூட்டத்திற்கு வர இயலவில்லை. என் கணவர் மட்டும் கூட்டத்திற்கு சென்று கலந்துக் கொண்டார். நான் நம்பிக்கை டி.வி.யில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சியை பார்ப்பேன். ஊட்டிக்கு Dr. ஆனந்த ஸ்திரா ஐயா வரமாட்டார்களா என பல நாட்கள் ஏங்கினேன். ஜூன் மாதம் ஐயா ஊட்டியில் கூட்டம் நடத்துவது அறிந்து உற்சாகமாய் வந்தேன். கூட்டத்திற்கு வருவதற்கு கர்த்தர் தான் பெலன் தந்தார். ஜெப வேளையில் ஆவியானவரின் அக்கினி அபிஷேகத்தை பெற்றுக்கொண்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

– திருமதி. அனோலினா, ஊட்டி.

பணத்தேவைகள் கர்த்தரால் சந்திக்கப்பட்டது!

2005–ல் ஒரு சகோதரி மூலம் அன்பரின் ஊழிய பத்திரிக்கை எனக்கு கிடைத்தது. அன்றிலிருந்து தொலைபேசி வாயிலாக அன்பரின் ஊழியத்திற்கு தொடர்புக்கொண்டு ஜெபித்து வந்தேன். 2011–ல் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக்

கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். கூட்டம் முடிந்து ஜெப வேளையில் **Mrs.** மார்கிரேட் ஸ்திரா அம்மாவிடம் என் பிள்ளையை கல்லூரியில் சேர்க்க பணம் இல்லை. அதற்காக ஜெபியுங்கள் என சொன்னேன். உடனே அம்மா பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அதன்பின் நான் எதிர்பார்க்காத வகையில் திடீரென Rs.37,000/- கிடைக்க ஆண்டவர் உதவி செய்தார். அதன்பின் என் பிள்ளை இரண்டு டிகிரி முடிக்கவும் கர்த்தர் தயை செய்தார். ஆண்டவர் எங்களை படிப்படியாக உயர்த்தினார். கடனே வாங்காமல் படிக்க கர்த்தர் இரங்கினார். தேவனுக்கே மகிமை! ஜெபித்த அம்மா அவர்களுக்கு என் நன்றியை தெரிவிக்கிறேன்.

– திருமதி. ரூத் பரமேஸ்வரி, குன்னூர்.

பொருத்தனையுடன் ஜெபித்தேன்!

என் மகன் உடல் நலமின்றி இருந்தான். அவன் பரிபூரண சுகம் பெற்றவுடன் அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதாக பொருத்தனையோடு ஜெபித்தேன். அதன்பின் மகன் குணம் அடைந்தான். ஆகவே அன்பரின் ஊழியத்திற்கு என்னுடைய பொருத்தனை காணிக்கை Rs.5000/-ஐ அனுப்பி கர்த்தருக்கு மகிமை செலுத்துகிறேன்.

– திருமதி. ஷீலா மகதலினா,

அரிப்பு வியாதி நீங்கியது!

என் தலையில் தொடர்ந்து பயங்கரமான அரிப்பு இருந்தது. அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு அரிப்பு பிரச்சனை நீங்குவதற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஊழியர் ஒருவர் பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபத்திற்குப் பின் என் தலையில் உள்ள அரிப்பு முற்றிலும் நீங்கிவிட்டது. நல்ல சுகத்துடன் இருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

– திருமதி. ரஞ்சிதம், தாராபுரம்.

தேர்வில் வெற்றி! வெளிநாட்டில் வேலை!

எனக்கு CA தேர்வு மிகவும் கடினமாக இருந்தது. ஆகவே தேர்விற்கு செல்லும் பொழுதெல்லாம் அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டு தேர்விற்காக ஜெபித்துதான் செல்வேன். கர்த்தர் தேர்வில் வெற்றி பெற உதவி செய்தார். அதன்பின் ஒரு வேலை கிடைத்தது. அங்கு வேலைப்பளு அதிகமாக இருந்த காரணத்தினால், அன்பரின் ஊழியத்திற்கு போன் செய்து எனக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபிக்கும்படி சொன்னேன். ஊழியர் ஒருவர் பாரத்துடன் ஜெபித்தார்கள். தேவ கிருபையால்

World Bank–ல் எனக்கு வேலை கிடைத்தது. வேலைகளும் இலகுவாகவே இருந்தது. அந்த வங்கி மூலமாகவே US செல்வதற்கான வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. குறுகிய காலத்தில் வெளிநாடு செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்தபடியால் கடைசி நாள் வரை எனக்கு விசா கிடைக்கவில்லை. உடனே அன்பரின் ஊழியத்திற்கு போன் செய்தேன். கடைசி நிமிடத்தில் எனக்கு விசா கிடைத்து வெளிநாடு செல்லவும் கர்த்தர் தயை செய்தார். தேவனுக்கே மகிமை!

– சகோ. பெஞ்சமின், சென்னை.

அரசு வேலை கிடைத்தது!

நான் GNM முடித்திருக்கிறேன். 2018–ம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டு, ஜெபவிண்ணப்பத்தில் எனக்கு அரசு வேலை கிடைக்க வேண்டும் என எழுதிக்கொடுத்து சென்றேன். Dr. ஆனந்த ஸ்திரா அவர்களும் என்னுடைய வேலைக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் எனக்கு இரங்கி 2021–ம் ஆண்டு அரசு வேலை கிடைக்க கர்த்தர் உதவி செய்தார். தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரங்கள்! ஐயா அவர்களுக்கும் என்னுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன்.

– ஜேஸ்மின், கன்னியாகுமரி.

Malayalam Whats App No.
+ 91 94889 32937

நன்றாக பேசுகிறான்

என்னுடைய பேரன் 3 வயது ஆகியும் பேசவில்லை. அப்பொழுது நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து என் பேரனுக்காக ஜெபிக்கும்படி Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் கேட்டுக்கொண்டேன். சகோதரர் ஜெபித்துவிட்டு அவன் போதும் போதும் என சொல்லுகிற அளவிற்கு பேசுவான் என்றார்கள், சகோதரர் சொன்னபடியே என் பேரன் நன்றாக பேசுகிறான். அற்புதம் செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

– திருமதி. திலகம், அழகப்பாபுரம்.

அலர்ஜி பிரச்சனை நீங்கியது!

என் மகளுக்கு திடீரென ஸ்கின் அலர்ஜி ஏற்பட்டது. நாள் முழுக்க சொறிந்துக்கொண்டே இருப்பாள். அதனால் உடல் எல்லாம் இரத்தமாக இருந்தது. இரவில் தூங்கமுடியாமல் அதிகமாக கஷ்டப்பட்டாள். கடந்த வருடம் தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்திற்கு என் மகளை அழைத்து வந்தேன். Dr. ஆனந்த ஸ்திரா

அவர்கள் என் மகளுக்காக ஜெபித்தார்கள். கொஞ்ச நாளிலே என் மகளுக்கு பரிபூரண சுகம் உண்டானது. தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

– திருமதி. நளினி, தூத்துக்குடி.

வெளிநாட்டில் வேலை கிடைத்தது!

மூன்று வருடங்களுக்கு முன்பு தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்துக்கொண்டேன். ஜெப வேளையில் என் மூத்த மகளுடைய வேலைக்காக ஜெபிக்கும்படி Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் கேட்டுக்கொண்டேன். சகோதரர் ஜெபித்துவிட்டு தீர்க்கதரிசனமாக மகள் வெளிநாடு போவாள் என சொன்னார்கள். அதன்படியே மகள் வெளிநாட்டில் வேலை செய்வதற்கு கர்த்தர் தாமே கிருபையாக இரங்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

– சகோ. சாமுவேல், தூத்துக்குடி.

உன் விசுவாசம் உன்னை பாதுகாக்கும்!

2018–ம் ஆண்டு எனக்கு குடல் இறக்கம் (Hernia) ஆப்ரேஷன் நடைபெற்றது. அத்துடன் ஒரு நரம்பில் இரத்த அடைப்பு இருந்தது. அதனால் ஆப்ரேஷனில் ஏதோ குழப்பம் ஆகிவிட்டது. ஆப்ரேஷன் முடிந்து வீட்டிற்கு வந்த பிறகும் வலியினால் கஷ்டப்பட்டேன். அப்பொழுது

“இயேசுவே, எந்த நிலையிலும் நான் உங்களை விட்டு விலகமாட்டேன்” என ஜெபித்தேன். அதன்பின் 6 மாதங்களுக்குப் பிறகு தூத்துக்குடியில் உள்ள தூய பேதுரு ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்துக் கொண்டேன். தனி ஜெப நேரத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் “இயேசுவே, எந்த நிலையிலும் உங்களை விட்டு விலகமாட்டேன்” என இவர் சொன்னபடியால் இவரை பாதுகாத்துக் கொள்ளும் என ஜெபித்து அனுப்பினார்கள். நான் வீட்டில் ஜெபித்தது இவருக்கு எப்படி தெரியும் என ஆச்சரியப்பட்டு கர்த்தரை ஸ்தோத்தரித்தேன். இப்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கிறேன். கர்த்தரை மகிமைப்படுத்துகிறேன்.

– சகோ. ஆன்டனி பிரெடரிக் டிவோட்டா, தூத்துக்குடி.

குழந்தை பாக்கியம் கிடைத்தது!

என் பெயர் பிரேமா. எனக்கு நன்கு அறிமுகமான ஒரு சகோதரிக்கு 5 வருடங்களாக குழந்தை இல்லை. கடந்த வருடம் பெங்களூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்திருந்தேன். அப்பொழுது அந்த

சகோதரிக்காக ஜெபிக்கும்படி Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் சொன்னேன். சகோதரரும் அந்த சகோதரிக்காக பாரத் துடன் ஜெபித்தார்கள். தற்பொழுது அந்த சகோதரிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. அற்புதம் செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். – பிரேமா, பெங்களூர்.

மன அழுத்தம் நீங்கியது!

என் மகன் பெயர் டேவிட். அவன் கடந்த ஒன்றரை வருடமாக மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இருந்தான். அதனால் குடும்பத்தில் சமாதானம் இல்லை, மிகுந்த போராட்டமாக இருந்தது. என்னசெய்வது என தெரியாமல் திகைத்து நின்றோம்.

2024–ம் ஆண்டு பாண்டிச்சேரியில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடைபெறுவதை என் தோழி புவனேஷ்வரி மூலம் அறிந்து கூட்டத்திற்கு வந்து கலந்துக்கொண்டோம். ஜெப நேரத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தீர்க்கதரிசனமாக, “டேவிட் உனக்கு கர்த்தர் வீட்டை உண்டு பண்ணுவார், நீ சுகமாவாய்” என சொன்னார்கள்.

கூட்டத்தின் இறுதியில் சகோதரரை சந்தித்தப்பொழுது, சகோதரர் கூறியது, கர்த்தர் தாமே மகனை பெயர் சொல்லி அழைத்து வீட்டை உண்டு பண்ணுவதாக கூறியிருக்கிறார். ஆகவே “நீங்கள் மகனைக் குறித்து கலங்கவேண்டாம் என சொன்னார்கள். நாங்களும் விசுவாசித்து மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்தோம். அதன்பிறகு மகனுடைய செயல்பாடுகளில் நல்ல மாற்றம் தெரிந்தது. மகன் தினந்தோறும் வேதம் வாசித்து ஜெபிக்கிறான். நன்றாக பாடுகிறான். அந்த அளவிற்கு கர்த்தர் நல்ல மாற்றங்களை அவனுக்கு தந்திருக்கிறார். ஆகவே எங்கள் வீட்டிலேயே ஜெபக்குழு ஆரம்பித்து இருக்கிறோம். என் மகன் வாழ்வில் அற்புதத்தை செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

– திருமதி. ஹில்டா, கடலூர்.

Tamil Whats App No.
+ 91 95004 87059

அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

facebook
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

Youtube
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

Twitter
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

Instagram
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org
www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

Dr. கார்ல் பேக்கர்

குடும்ப பொறுப்பை சுமக்க வேண்டிய ஒருவருக்கு மிஷனெரி அழைப்பு உண்டா? அவரும் தேவனுக்கு உயர்ந்ததொரு பணி செய்யமுடியுமா? இக்கேள்விகளுக்கு பதிலாக அமைவதுதான் கார்ல் பேக்கரின் வாழ்க்கை!

குடும்ப சூழல்

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர் கார்ல் பேக்கர். குடும்ப பொறுப்பின் காரணமாக மேற்படிப்பை தொடர முடியாத நிலையில் மிகவும் கஷ்டப்பட்டார். விதவைதாய், திருமணமாகாத சகோதரி இவர்களை காப்பாற்ற வேண்டி பட்டறை ஒன்றில் வேலை செய்ய ஆரம்பித்தார். அந்நிலையில் ஆண்டவரோடு ஒரு பொருத்தனை செய்தார். "ஆண்டவரே, நீர் எனக்கு நல்ல கல்வியைத் தந்தால் என் வாழ்வை உமக்கு அர்ப்பணித்து ஊழியம் செய்வேன்." ஆண்டவர் இவரின் அர்ப்பண ஜெபத்தைக் கேட்டார்.

மருத்துவபணி

1916-ம் ஆண்டு தனது 22-ம் வயதில் பிலதெல்பியா கல்லூரியில் மருத்துவபடிப்பை தொடர்ந்தார். ஆண்டவரின் வழிநடத்துதல் ஆச்சரியமான முறையில் இவரைத் தாங்கியது. அமெரிக்காவில் மருத்துவராகத் தன் பணியை ஆரம்பித்தார். பெயரும், புகழும் இவரைத் தேடி வந்தன.

மிஷனெரி பணிக்கான அழைப்பு

எதிர்பாராத விதமாக ஆப்பிரிக்காவிலிருந்து மிஷனெரிப் பணிக்கான ஒரு அழைப்பு இவருக்கு வந்தது. ஆனால் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக அவ்வழைப்பை இவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் தான் ஆண்டவரோடு செய்த பொருத்தனையை நினைத்துப் பார்த்தார். 1928-ம் ஆண்டு, தனது பணியை விட்டு விட்டு ஆப்பிரிக்கா நோக்கி பயணம் ஆனார்.

1934-ம் ஆண்டு ஓசா என்ற இடத்தில் மருத்துவமனை ஒன்றை நிறுவினார். அனுதினமும் 200-க்கும் மேற்பட்ட மக்கள் இவரைத் தேடி வந்தனர். மந்திரவாதிகளின் கட்டுபாட்டில் இருந்த மக்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் ஈர்க்கப்பட்டனர். வேதாகம சம்பவங்களை ஆப்பிரிக்க மக்கள் புரிந்து கொள்ளும்படி அவைகளை படங்களுடன் விளக்கிக் காட்டி போதித்தார். தன்னை நாடி வந்த நோயாளிகள் உடலிலும், உள்ளத்திலும் சுகம் பெற்றனர்.

தொழுநோயாளிகள் மத்தியில் பணி

இட்டூர் என்ற காட்டுப்பகுதியில் 1100 ஏக்கர் நிலத்தில் தொழுநோயாளிகளுக்கென கிராமம் ஒன்றை ஏற்படுத்தி அதில் 4000 தொழுநோயாளிகளை தங்க வைத்தார். மனநோயாளிகளும், பிசாசு பிடித்தவர்களும் இயேசுகிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தால் புதுவாழ்வு பெற்றார்கள்.

விண்ணக பயணம்

மிஷனெரியாக பணி செய்துக் கொண்டிருந்தப் பொழுதே இவர் கிறிஸ்துவின் அன்பை நெருங்கி சுவைக்க விண்ணக வாழ்வை நோக்கி பயணமானார்.

Telugu Whats App No.
+ 91 91770 87860

S.J.SAVES TRUST

நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து,
சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். சங்.82:3
முறையிடுகிற ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தேன். யோபு 29:12
ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து, ஏழையின் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார். சங்.72:4

சேலம் மாவட்டத்தில் இயங்கி வருகிற இலவச ப்யூஷன் சென்டர்

- விடுமுறை நாட்களுக்குப் பிறகு ஜுன் மாதம் 30-ம் தேதியன்று சேலம் மாவட்டம் மேட்டுப்பட்டியில் நமது SJSAVES TRUST மூலமாக ஏழை பிள்ளைகள் 100 பேருக்கு இலவச ப்யூஷன் சென்டர் மற்றும் உணவு அளிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- நமது ஸ்தாபகர் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் பிள்ளைகளை நேரில் சந்தித்து, அனைவருக்கும் பள்ளிக்கு தேவையான உபகரணங்கள், ஊட்டச்சத்து பொருட்கள், பிரியாணி, இனிப்பு வகைகளை கொடுத்தார்கள்.
- பிள்ளைகள் அனைவரும் நன்றாக படிக்க தேவையான நல் ஆலோசனைகள் மற்றும் உளவியல் ரீதியான ஆலோசனைகளை வழங்கினார்கள்.

பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் விபரங்கள்:

- பேனா, பென்சில், ரப்பர், ஸ்கேல், ஜாமன்ரி பாக்ஸ், பவுச், ஷார்ப்னர், டிபன் பாக்ஸ், வாட்டர் பாட்டில், நோட்டுகள், கைக்குட்டை, சத்து மருந்து, சளி மருந்து, புரோட்டின் பவுடர், இனிப்பு, காரம், சிக்கன் பிரியாணி, தேங்காய் எண்ணெய், சோப்பு ஆகியவைகள் ஆகும்.

சேலம் மாவட்டத்தில் இயங்கி வருகிற

இலவச தையல் பயிற்சி வகுப்புகள்

ஏழை பெண்கள், விதவை தாய்மார்கள் அனைவரின் நல்வாழ்வை முன்னிட்டு S.J.SAVES TRUST மூலமாக இலவச தையல் பயிற்சி வகுப்புகள் ஜுலை மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டது. திறமையான ஆசிரியரைக்கொண்டு கற்பிக்கப்பட்டு வருகிறது. இதில் 7 பெண்கள் வந்து பயிற்சி பெற்று வருகிறார்கள்.

மேட்டுப்பட்டி கிராமத்தில் உள்ள ஊர்த்தலைவர்கள் அனைவரும் S.J.SAVES TRUST மூலம் செய்து வருகிற அனைத்து பணிகளை பாராட்டியும் அவர்களுடைய ஒத்துழைப்பைத் தந்தும் நமக்கு உதவி செய்கிறார்கள். இந்த பணிக்கு உதவி செய்கிற பங்காளர்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய

Bank A/c. Name : S J SAVES TRUST
Account No. 019150310875369
Bank Name : Tamilnadu Mercantile Bank
Branch : Palakarai, Trichy
IFSC Code : TMBL 0000019
A/c Type : Current

மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

Bank A/c. Name : S J SAVES TRUST
Account No. 36477148891
Bank Name : State Bank of India
Branch : Cantonment, Trichy Main Brach
IFSC Code : SBIN 0000930
A/c Type : Current

நீட் முதுநிலை தேர்வு ஆகஸ்ட் 11ம் தேதி காலை, மாலை என இரு வேளைகளில் நடைபெறும் என தேசிய மருத்துவ கல்வி வாரியம் அறிவித்துள்ளது. இளநிலை நீட் மற்றும் நெட் தேர்வு முறைகேடு விவகாரம் நாடு முழுவதும் அதிர்வலைகளை எழுப்பியது. வினாத்தாள் கசிவு, தேர்வு நடத்தியமுறை தொடர்பாகவும் குற்றச்சாட்டு எழுந்தன. இதனிடையே, நீட் முதுநிலை தேர்வு கடந்த மாதம் ஜூன் 23–ம் தேதி நடைபெற இருந்த நிலையில், 2 முறை ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் முதுநிலை நீட் தேர்வு ஆகஸ்ட் 11ம் தேதி நடைபெறும் என தேசிய மருத்துவ கல்வி வாரியம் அறிவித்துள்ளது.

அசாம் மாநிலத்தை தொடர்ந்து மேகாலயா மாநிலத்திலும் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது. கடந்த ஒரு வாரமாக இடைவிடாமல் பெய்து வரும் கனமழை காரணமாக மேகாலாயாவின் முக்கிய ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கரையோர குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. மழை தொடர்வதால் வெள்ள அபாயம் குறித்து மக்கள் அச்சமடைந்துள்ளனர். இதேபோல் மணிப்பூர் மாநிலத்திலும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

உலகின் முதல் இயற்கை எரிவாயுவில் இயங்கும் மோட்டார் சைக்கிளை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது. ∴ப்ரீடம் 125 என்று பெயரிடப்பட்ட இந்த மோட்டார் சைக்கிளை, இந்தியாவை சேர்ந்த பஜாஜ் ஆட்டோ உற்பத்தியாளர் வடிவமைத்து வெற்றி கண்டுள்ளனர். இதனையடுத்து மகாராஷ்டிராவில் புனேவில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் இந்த மோட்டார் சைக்கிளை இந்திய போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி பினே வெளியிட்டு துவக்கி வைத்தார். அப்போது பேசிய அவர் இந்த வகை வாகனங்களால் சுற்றுச்சூழல் மாசுபடுவது குறைக்கப்படும் என்றும் இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசலை விட சிஎன்ஜி மலிவானது என்பதால் ∴பிரீடம்–125 செலவு குறைந்ததாக இருக்கும் என்று கட்கரி கூறினார்.

சீனாவில் மேலும் 2 விமான நிலையங்களில் விசா இன்றி தங்கும் நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சீனா வழியாக செல்லும் பயணிகளுக்கான விசா நடைமுறையில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அதன்படி மற்ற நாட்டுக்கு செல்லும் பயணிகள் சீனாவில் 144 மணிநேரம் அதாவது 6 நாட்கள் வரை சீனாவில் தங்கிக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து உள்ளிட்ட 54 நாடுகளை சேர்ந்தவர்கள் பயன்பெற்று வருகின்றனர். தற்போது விசா தளர்வு அளிக்கப்பட்டுள்ள சின்செங் விமான நிலையம், லிஜாங் விமான நிலையம் மற்றும் துறைமுகங்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது.

செகந்திராபாத்தில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்
நாள்
ஆகஸ்ட் 15
(வியாழக்கிழமை, அரசு விடுமுறை)
இடம்: YMCA மெயின் ஹால்,
S.P. ரோடு, யசோதா மருத்துவமனை எதிரில்,
மணிக்வண்டு அருகில், செகந்திராபாத்.
நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Dr. ஜேன் ஜாஷ்வா
தொடர்புக்கு : 91770 87860 & 99445 36343

வங்கிக் கணக்குகளின் விபரம்
DR. ANANDA STIRA
A/C NO. 10848469699
ANBARIN OOZHIYAM
A/C NO. 10848559426
MINISTRY OF JESUS
A/C NO. 10848474869
IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.
காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு
காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
(10.00 AM - 6.00 PM)

ஆப்ரேஷன் இல்லாமல் சுகம் தந்த இயேசு

என் பெயர் புனிதா. எனக்கு கடந்த ஒரு மாதமாக Urinary பிரச்சனை இருந்தது. இரவில் அடிக்கடி சிறுநீர் போக வேண்டியிருந்ததால் சரியான தூக்கம் இல்லை. சோர்ந்து போயிருந்தேன். அருகில் உள்ள மருத்துவரிடம் சென்ற பொழுது அரசுமருத்துவமனைக்கு செல்லும்படி எழுதிக் கொடுத்தார்கள். அங்கு என்னை பரிசோதித்துவிட்டு, சிறுநீர்ப்பை இறங்கி விட்டது என கூறி சிறுநீர் கழிக்கும் bag போட்டு அனுப்பினார்கள். அத்துடன் 10 நாட்களுக்குப் பிறகு பரிசோதித்துவிட்டு ஆப்ரேஷன் செய்யவேண்டும் எனவும் சொல்லிவிட்டார்கள். நானும், என் மகளும் மிகுந்த கலக்கத்துடன் வீட்டிற்கு வந்தோம்.

உடனே Mrs.மார்கிரேட் ஸ்திரா அவர்களிடம் சொல்லி எனக்காக ஜெபியுங்கள் என்றேன். அவர்கள் பாரத்துடன் ஜெபித்தார்கள். 10 நாட்களுக்குப் பிறகு பரிசோதனைக்கு வரும்படி மருத்துவர் கூறியிருந்தார். ஆகவே பரிசோதனைக்கு செல்வதற்கு முன் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களிடம் எனக்காக ஜெபியுங்கள் என கூறினேன். பாஸ்டர் அவர்களும் ஊக்கமாய் ஜெபித்தார்கள். அதன்பின் பரிசோதனைக்கு சென்றபொழுது மருத்துவர் என்னை பரிசோதித்துவிட்டு, இது சின்ன பிரச்சனைதான் மாத்திரை சாப்பிட்டால் போதும் எனக்கூறி bag-ஐ எடுத்துவிட்டார்கள். ஆப்ரேஷனும் வேண்டாம் என கூறி அனுப்பி விட்டார்கள். தேவ கிருபையால் நல்ல சுகத்துடன் இருக்கிறேன். இம்மட்டும் எந்த பிரச்சனையும் இல்லாமல் என்னை பாதுகாத்து வருகிற கர்த்தரை துதிக்கிறேன். எனக்காக ஜெபித்த பாஸ்டர் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

– திருமதி. புனிதா, எடமலைப்பட்டி புதூர்.

joshua@mojindia.org

விடுதலையின்
ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும் காலை 9.30 மணி - 11.30 மணி

அபிஷேகம் நிறைந்த பாடல்கள் | அனல் மூட்டும் தேவ செய்தி | உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்

10-வது குறுக்கு தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லை நகர், திருச்சி-620018.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

திருநெல்வேலியில்

விடுதலையின் ஆசீர்வாத ஜெபக்கூட்டம்

இடம் : செல்வி மஹால்
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன்குறிச்சி, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி.

நாள்: ஆகஸ்ட் 11 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 4.00 மணி முதல்
இரவு 8.00 மணி வரை

தேவ செய்தி

Dr. ஆனந்த ஸ்திரா

திருமதி. மார்கிரேட் ஸ்திரா

குறிப்பு : கூட்டம் சரியாக நான்கு மணிக்கு ஆரம்பித்து 8 மணிக்கு முடிந்துவிடும்.
எனவே சரியான நேரத்திற்கு வரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மதுரையில்

குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் தனிஜெபம்

நாள் ஆகஸ்ட் 18 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஹோட்டல் ஜெர்மானுஸ்
கன்வென்ஷன் ஹால்,
காளவாசல் பஸ் ஸ்டாப், மதுரை.

நேரம் : மாலை 4.00 மணி முதல்
இரவு 8.00 மணி வரை

ஜெபம் மற்றும் ஆலோசனை

Dr. ஆனந்த ஸ்திரா

தொடர்புக்கு : 9488845627 & 0431 - 2741925

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,